04 ஜனவரி, 2014

<u>பிரதமர் செய்தி மாநாட்டில் கூறிய அதி முக்கியமான செய்தி</u>

அருண் ஜெய்ட்லி
(எதிர்க்கட்சி தலைவர், மாநிலங்களவை)

2014 ஜனவரி 03 அன்று, பிரதமர் ஊடகங்களுடன் நடத்திய உரையாடல் பல சர்ச்சைகளை வளர்த்து விட்டிருக்கிறது. அப்போது அவர் பேசிய விவகாரங்களில் குறிப்பாக, பொது தேர்தலுக்குப் பிறகு அவர் எந்த தலைமையும் வகிக்க மாட்டார், ராகுல் காந்தியைப் பற்றிய புகழாரம், நரேந்திர மோதி பற்றிய விமர்சனங்கள், ஊழலையும் பணவீக்கத்தையும் கட்டுப்படுத்துவதில் அடைந்த தோல்வியை ஒப்புக்கொண்டது ஆகியவை அதிக கவனத்தை ஈர்த்தவை. அவற்றில் சில விவகாரங்களுக்கு பிஜேபியும் எதிர்வினை ஆற்றியது.

செய்தி மாநாட்டில் காஷ்மீர் பற்றிய கருத்துகள் இந்த சர்ச்சைகளுக்கிடையே தவறவிடப்பட்டிருக்கிறது. ஒரு செய்தியாளர் பிரதமரை, அவரது பாகிஸ்தான் தொடர்பான முன்னெடுப்புகளைப் பற்றி கேள்வி எழுப்பினார். முதல் முறையாக பிரதமர், இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் மோதலை தீர்வுக்குக் கொண்டுவர கூட்டம் அமைத்த ரகசியத்தைக் கூறினார். ஒரு திடீர் திருப்பம் வெளிச்சத்திற்கு வந்த போது, ஜென்ரல் பர்வேஸ் முஷாரஃப் மற்ற தலைவர்களுக்கு வழி விட வேண்டியிருந்தது அதனால் அந்த ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்பு ஜனாதிபதி முஷாரஃப் சொந்த நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டு லண்டனில் வாழ்ந்து வந்ததும் அதையே உறுதி செய்கிறது.

காஷ்மீர்க்கு தீர்வு தரும் தீர்மானம்தான் எது? இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் இந்தக் கேள்விக்கு பதில் தெரிந்துகொள்ள உரிமை இருக்கிறது.

இந்த விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு தெளிவாக இருந்து வருகிறது. ஜம்மு மற்றும் காஷ்மீர் இரண்டும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. 1994இல் இந்திய பாராளுமன்றம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது, அது பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதிகள் இந்திய எல்லைக்குள் அடங்கும் ஒருங்கிணைந்த பகுதி என்று அறிவித்தது. காஷ்மீரில் எந்த மூன்றாவது நபரின் தலையீடும் அனுமதிக்கப்பட மாட்டாது என்பதில் இந்தியா உறுதியான நம்பிக்கையோடு இருந்தது. பாகிஸ்தான் காஷ்மீர் விவகாரத்தில் முடிவுபெறாத திட்டத்தைக் கொண்டுள்ளது. அது காஷ்மீர் இந்தியாவின் இறையாண்மையோடு தொடர்புகொண்டது என்பதில் சமரசம் அடையாமல் இருக்கிறது. அதனால் பாகிஸ்தான் இதற்கு முடிவு கொண்டு வர வேண்டும் என்பதற்காக தீவிரவாதத்தையும் போரையும் பயன்படுத்தி வருகிறது. இந்தியா எல்லைகளை மீண்டும் மாற்றி அமைக்கும் காலமும் சகாப்தமும் முடிந்து போய் விட்டது. இந்தியா காஷ்மீர் எல்லை விவகாரத்தில் பேச்சுவார்த்தைக்கு எந்த இடமும் இல்லை.

ஜம்மு மற்றும் காஷ்மீர்க்கு தனி அந்தஸ்த்து வழங்கும் நேருவின் பார்வை தவறான ஒன்று என்பது எனக்கு எப்போதும் இருக்கும் நம்பிக்கை. கடந்த 67 வருட பயணத்தில் இந்த தனி அந்தஸ்து என்பது பிரிவினைவாதமாகத்தான் இருந்து வருகிறது. காங்கிரஸ் தனி அந்தஸ்து தரும் நிலைப்பாட்டில்தான் இருந்து வருகிறது, தேசிய மாநாட்டு வழக்கறிஞர்கள் 1953க்கு முந்தைய

நிலையையும், பிடிபி தனி ஆட்சியையும், பிரிவினைவாதிகளெல்லாம் ‘ஆசாதி என்பதையும் தான் வலியுறுத்தி வருகின்றன. இவை எல்லாமே இந்தியாவின் இறையாண்மையைக் கலங்கப்படுத்தும் நோக்கம் கொண்டவை. அவர்கள் விருப்பமெல்லாம் ஜம்மு காஷ்மீருக்கும் இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும் இடையே இருக்கும் அரசியலமைப்பு மற்றும் அரசியல் ரீதியான அனைத்து தொடர்புகளையும் வலுவிழக்க வைப்பதுதான். இந்நிலையில் தற்போது மன்மோகன்சிங் அரசுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே முடிவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் முழு விவரங்களையும் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பாகிஸ்தான் காஷ்மீர் மீதான இடைக்கால தீர்மானத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத பல கோரிக்கைகளையும் நிபந்தனைகளையும் வாதிட்டு வருகிறது. அவற்றில் எல்லைப் பராமரிப்பில் முன்பிருந்த நிலை, காஷ்மீரில் இராணுவமயமற்ற நிலை, எல்லைக் கட்டுப்பாட்டுகளைக் குறைத்து மக்கள் பயணம் மற்றும் சரக்குகள் பரிமாற்றம் ஆகியவை சுதந்திரமாக நடைபெற வேண்டும், ஜம்மு மற்றும் காஷ்மீர் விவாகாரத்தில் இறுதி தீர்வு காணப்படும் காலம் வரை முத்தரப்பு பொது கூட்டமைப்பு, முடிவுகள் எடுப்பதை நிறுத்திவைக்க வேண்டும். சில பாகிஸ்தான் அவதானிகளும் மற்றும் காஷ்மீர் குழுக்களும் இரண்டு நாடுகளின் பணமும் ஜம்மு மற்றும் காஷ்மீரில் செல்லும்படி இருக்க வேண்டும் என்று பேசி வருகிறார்கள். இவற்றில் எதாவது ஒன்று அல்லது அனைத்தும் கூட காஷ்மீர் விவகாரத்தில் எடுக்கப்பட்ட கிட்டதட்ட முடிவுக்கு வந்திருப்பதாக உள்ள தீர்மானத்திற்கு ஏற்றவையாக இருப்பதாக எனக்கு தெரியவில்லை. அவை

உண்மையற்றதாகவும் இருக்கலாம். மேலும் உண்மையை அறிந்துகொள்வதற்காக, பிரதமரின் நினைவுக்குறிப்புகளுக்காக நான் காத்திருக்கவும் முடியாது.

இரண்டு தூதரகங்களையும் உளவு பார்ப்பதும் ஒன்றும் தெரியாத விஷயமல்ல. அது உலகம் முழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஸ்தாபனம். ஆனால் தேசிய நிலைப்பாடுகளில் முற்றிலும் முரண்பட்டு இருக்கும் இரண்டு தூதரகங்களை கண்காணிப்பது முடியாத ஒன்று. அப்படியே அது சாத்தியம் என்றாலும் அது தேசிய சிந்தனையிலிருந்து மாறுவதாகிவிடும். ஒருவேளை பாகிஸ்தான் தொடர்ந்து மேற்கண்ட அதே விஷயங்களைக் அதாவது இப்போதுள்ள திடீர் திருப்பத்திற்கான காரணங்களான எல்லையில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது மற்றும் முத்தரப்பு கூட்டமைப்பு ஆகியவற்றை குறிப்பிட்டு வந்தால், அது சரியோ தவறோ ஜம்மு மற்றும் காஷ்மீர் எல்லையை சர்ச்சை உடையதாகவே ஏற்றுக்கொள்ள வேண்டிவரும். இந்த கடினமான சூழலில் இந்தியத் தூதரகம் காஷ்மீர் விவகாரத்தில் சர்வதேசமயமாக்கலல்லாமலும் மற்றும் எல்லைகளுக்கிடைப்பட்ட தீவிரவாதத்தில் சர்வதேசமயமாக்கலையும் வெற்றி கண்டிருக்கிறது. இந்த தீர்மானத்தை ஆலோசனை செய்வதனால், நாம் எல்லா பலன்களையும் விரயம் செய்ய நேரிடும். பாகிஸ்தானின் தீவிரவாத அமைப்புகளைத் தகர்க்காமல் பள்ளத்தாக்குகளில் இருந்து இராணுவ அமைப்புகளை நீக்குவது பேராபத்தை விளைவிக்கும். அதனால் அரசு இந்த பாதையில் செயல்படாது என்று நான் நம்புகிறேன்.

முதல் முறையாக காஷ்மீர் விவகாரம் பற்றி பிரதமர், தேசத்திற்கு அறிவுக்கும் இந்த தீர்மானம், கிட்டதட்ட தோல்வியடைந்த ஒரு தீர்மானத்தைப் பற்றி அவர் தன் மனதில் கொண்டுள்ள எண்ணங்கள் பற்றிய மக்களுக்கு இருக்கும் அனுமானத்தின் மீதான நம்பிக்கையை அதிகப்படுத்தும் உயர்ந்த விருப்பமாகவே உள்ளது. பிரதமரின் பதவிக்காலம் பற்றிய வரலாறை எழுத இந்த விவரங்கள் எல்லாம் மிகப்பெரிய உதவியை அளிக்கும்.